


# ஜம்பு பிக்சர்ஸ்

★ ★ திருச்சி ரிலீஸ் ★ ★

விலை அணா 1 1/2

## கதா பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஹொன்னப்பா | ... | வல்லபன் |
| காளி ரத்னம் | ... | பூப்புலி |
| எம். ஆர். சுவாமிநாதன் | ... | பூர்ணனந்தன் |
| ஜி. எம் பஷீர் | ... | உசூர்பர் மன்னன் |
| பி. ராஜகோபாலய்யர் | ... | குரு |
| கே. வி. ஸ்ரீனிவாசன் | ... | ஆதி வீரவர்மன் |
| டி. கே. கோவிந்தன் | ... | உத்தமன் |
| டி. கே. கல்யாணம் | ... | அஸ்வம் |
| வி. கே. கார்த்திகேயன் | .. | நீலம் |
| சக்ரபாணி அய்யங்கார் | ... | ஸ்வர்ணபுரி மன்னன் |
| எஸ். ஜி. சுப்பய்யர் / கே. எஸ். மணி அய்யர் | ... | தேவமனோகரியின் ஆலோசகர் |
| ராமய்யா சாஸ்திரி | ... | கோசல மன்னன் |
| திருப்பதி | ... | பூத ராஜா |

ஸ்டண்ட் சோமு, குண்டுமணி, ஏ. வி. ரமணி மற்றும் பலர்

| | | |
|---|---|---|
| பி. பானுமதி | ... | தேவமனோஹரி |
| பி. எஸ். சரோஜா | ... | மனோகரி |
| ஸி. ஆர். லக்ஷ்மிதேவி | ... | ஸ்வர்ணகாந்தி |
| பி. ஆர். சந்திரா | ... | பூலோக புத்திசாலி |
| எம். எம். ராதாபாய் | ... | ராணி மல்லிகாதேவி |
| ஆர். பத்மா | ... | வித்யாதரி |
| கே. கே ராஜாமணி | ... | டிம்மி |
| ஸி. கே. வேணுபாய் | ... | பொம்மி |

லலிதா பத்மினி, ராகினி.

| | | |
|---|---|---|
| பாட்டு | — | பாபநாசம் சிவன், ராஜகோபாலய்யர், ராமய்யதாஸ் |
| ஸங்கீதம் | — | ஜி. ராமனுதன் |
| டான்ஸ் | — | தேவிபிரசாத்கடக், வேதாந்தம் ராகவய்யா |
| காமிரா | — | வி. ஸ்ரீனிவாச ராகவன், என். ஸி. பாலகிருஷ்ணன் |
| ஸவுண்டு | — | எச். கிளார்க், வி. எஸ். ராகவன் |
| எடிட்டிங் | — | எம். கே. ரமணி |
| ஆர்ட் | — | ராமராஜு, வத்ருக்கர், அம்மையப்பன் |
| மேக்கப் | — | ஹரிபாபு, ஸ்வர்ணப்பா |
| ஸ்டுடியோ | — | ப்ரகதி |

டைரக்ஷன்: **ஏ. டி. கிருஷ்ணசாமி**

**ஆர்கேஸ் தயாரிப்பு**

# கதைச் சுருக்கம்

ஹிமய மலையிலிருந்து குமரிமுனைவரை மகா அழகி தேவ மனோஹரியைப் பற்றியும் அவளிடமிருக்கும் அபூர்வ மேகவர்ணக் குதிரையைப் பற்றியும் மக்கள் வானளாவப் பேசிக்கொண்டிருந் தார்கள். சுழலும் சக்கரத்தை எவன் நிறுத்துகிறானோ, அவனுக்கே இந்த அரிய இரண்டு பரிசுகளும். கேட்கவும் வேண்டுமா? பல தேசங்களிலிருந்தும் மன்னர்கள் திரண்டு வந்தார்கள். ஆனால் வெற்றி எவருக்குமே கிட்டவில்லை. தோல்வி யடைந்த ஒவ்வொரு வரும் தலைக்கு ஆயிரம் பொன் கொடுத்தே விடுதலை பெறவேண்டி யிருந்தது.

சாதாரண வேடுவனாக இருந்த வல்லபன் மரத்துக்குப் பின் மறைந்து நின்று ஒரே அம்பை விட்டு சக்கரத்தை நிறுத்துகிறான். தேவமனோஹரி வல்லபனைக் காதலிக்கிறாள். ஆனால் அரண் மனையில் கலகம் ஏற்பட்டதால் காதலர்கள் பிரிகிறார்கள்.

குடிசை திரும்பிய வல்லபன், தானும் ஒரு ராஜகுமாரன் என்பதை அறிகிறான். ஒரு வேதாளத்தின் ஆளுகையிலுள்ள ஒரு கிணற்றில் தன் தந்தையைத் தள்ளிய தூமகேது மீது, பழிக்குப் பழி வாங்க யாத்திரைக்கு கிளம்புகிறான். குரு அவனுக்கு உபதே சித்த நான்கு பொன்மொழிகளும் சமயத்துக்கு உதவுகின்றன.

தந்தையை வேதாளத்தினிடமிருந்து மீட்க மேகவர்ணக் குதிரை, ஸ்வர்ணமேக பக்ஷி, நவரத்தினப் பதுமை ஆகியவைகள் தேவை என்றறிந்து இவை மூன்றையும்பெற அரும்பாடு படுகிறான்.

மனோஹரபுரியில், சக்கரத்தை நிறுத்தி அரசகுமாரியை மணக் கிறான். ஸ்வர்ணமேக பக்ஷியையும் அடைந்து ஸ்வர்ணகுமாரியை மணந்தபின், தான் அரும்பாடு பட்டு அடைந்த இரண்டும் தான் தேடி வந்தவை அல்ல, போலிகள் என்றறிகிறான். உண்மை யான இளவரசி தேவமனோஹரி ஓர் கடலுக்கப்பால் இருக்கிறாள் என்பதை அறிந்து அங்கே செல்கிறான்.

வல்லபனை தேவமனோஹரி காதலிக்கிறாள். அவன் நாடி வந்ததைக் கொடுக்கவும் சம்மதிக்கிறாள். ஆனால் அந்த நாட்டின் தலைவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள்.

இதற்குள் 'போலி' தேவமனோஹரி ராஜசபைக்கு விஜயம் செய்து நடனமாடுகையில், விஷயம் அறிந்த தேவமனோஹரி அவர் களைச் சிறைப் படுத்துகிறாள் பின்னர் பச்சாதாபப்பட்டு, கோசல தேசத்தில் நடக்கும் சம்பவங்களை அறியும் ஆற்றலை அளிக்கிறாள். வல்லபன் தேவமனோஹரியின் உதவிபெற்று, வேதாளத்திட மிருந்து தந்தையை மீட்டு, மூன்று இளவரசிகளையும் மணந்து சுகவாழ்வு நடத்துகிறான்.

# தேவமனோஹரி

## பாடல்கள்.

**வல்லபன்**

தேவமனோஹரியைக் கண்டிடவும் வேண்டும்
மேவும் உயர் சக்கரக்கை கொண்டிடவும் வேண்டும்
ஆடி அசைந்து எனைத்தேடி வரவேண்டும்
ஓடி வந்து எந்தனுக்கே மாலையிட வேண்டும்

அரசிளங் குமாரரெல்லாம் அஞ்சிடவும் வேண்டும்
அங்கவர்கள் பங்கப்பட்டு அழிந்திடவும் வேண்டும்
மங்கை மனோஹரியுமன மயங்கிடவும் வேண்டும்
இங்கிதமாய் இருவருமே இருந்திடவும் வேண்டும்

எந்தனது எதிரியெல்லாம் ஏங்கிடவும் வேண்டும்
சொந்தமுள மோகனமா நந்தங்கொள்ள வேண்டும்
சிந்தைமகிழ் வோடிருக்க சேர்ந்திட வேண்டும்
என்று மினி தாக சுகவாழ்வு பெற வேண்டும்

---

**மனோஹரி.** ராகமாலிகை.

வா—ஓடிவா—என்னருகில் வா மானே
உனக்கேனுடல் இளைத்து போச்சுது—வா வா
துள்ளி துள்ளி ஓடிவா
என்னருகில் ஓடிவா—வா—வா—வா

அஞ்சுகமே நீ கீச்சு கீச்சென்னுமல்
ஒரு பேச்சுப் பேசியாகிலும் பெயரைக் காத்துக்கொள்

அழகுமட்டும் இருந்தால் போதுமோ
அபிநயம் லயமும் வேண்டாமோ—மயிலே.

**மனோஹரி** விஜயநாகரி—ஆதி

யாரோ எந்தன் உள்ளம்
கொள்ளை கொண்டு சென்றான்—ஒரு மோகனுங்கனவன்

மாமதனோ நீதிருமாலின் மருகனோ
சுகிர்தசேவ சுதனோ
வில்விஜயன் அவனோ அறியேன்
என்ன சொல்வேன் அவன் எழில்
கண்டே நான் மயங்கினேன்
குறுநகை புரிந்தான் வசமழிந்தேன்
கொஞ்சும் இன்மொழியில் கருத்தழிந்தேன்
உண்மையிலே உடன் வருவேனென்றான்
சொன்ன சொல் உறுதியில்லாதவன்
ஊரெதுவோ அவன் பேரேனும் அறியேன்
ஆர்வமூட்டி மறைந்தான்—அன்று வந்தவன் (யாரோ)

---

**பூப்புலி**

குடித்தனம் சுத்த தடித்தனம் இதை
நடத்தணும் பதம் படுத்தணும்—அந்த குடித்தனம்
படித்து படித்து எடுத்துச் சொல்லியும்
பதப்படத்தனை விதத்தில் இல்லை (குடித்தனம்)
அரிசி விக்கிற விலையிலே
அடுப்பு வைக்க ஓலையில்லே
மனுசன் நிக்கிற நிலையிலே—இந்த
பெண்டுகள் சண்டை தொல்லையிலே (குடித்தனம்)

(தொகையரு)

இந்த மனுசன் கெட்ட கேட்டுக்கு
ரெண்டு பெண்டாட்டி ஆசை
ஐயோ இசகிப்பிசகி மாட்டிக்கொண்டு இடிபடுதே மீசை
கொண்டு வந்த பெண்டு ரெண்டும்
கொழுத்துப்போன வேசை
இவர்கள் கோபத்தை தணிப்பதென்றால்
கூடுதில்லை சேச்சே.

(பாட்டு)

மானம் வெட்கம் சூடுசொரணை
நல்ல ரத்தம் இல்லை
நீங்க மனுஷப்பிறப்பாய் இருந்தால்
தெரியும் மதிப்பாரெந்தன் சொல்லை
ஆனமட்டும் சொல்லிப்பார்த்து
அசந்திளிக்கிறேன் பல்லை—ஐயோ
அங்மிங்கும் மாட்டிக்கொண்டு
யார் படுவார் இத்தொல்லை — இந்த (குடித்தனம்)

முட்டாள் மனமே. எதுக்காக நீ
ரெண்டு கண்ணுலம் மூடிக்கணும்
மொரட்டு பெண்டுகரெண்டு பேரும் என்
மொகரக்கட்டையில் இடிக்கணும்
சுட்டாத்தெரியும் நண்டுக்கன்னு
சொன்னதை நெத்தம் படிக்கணும்
சொகம் இப்போது தெரியுதா உன்னை
பழம்செருப்பாலே அடிக்கனும்—இந்த (குடித்தனம்)

---

**வல்லபன்** ராகம்—ரீதிகௌளை

தாயே பராசக்தியே
நீயே தயவாய்
நினதொரு கண்பார்

திருவார் மலர் மகளும் கலைவாணியும்
திருமணி பார்வதி தேவியும் நீ
மறுவேர் எவரையுமென் மனம் நாடுமோ
திருவருள் நீ செய்ய வேண்டும்
நீ நேரிலென்...... தாயே

வாவா தலை வணங்கினேன்
வலிய வந்து நீயென் மனம் போல்

வாவா அரியவழி காட்டி யெனைக்
காக்கவேணும் பாரினில் கருணையுடன்
உறுதிகொண்ட உந்தன்
உள்ளமுடையார் உனையல்லாது யாரம்மா

சரணம் ஸ்ரீ மஹா மாயா
சாதுஜன பூஜிதையே
ஜயமருள்...எனது...தாயே

---

**மனோஹரி** கானடா—ஆதி

பல்லவி

போய் வா பாங்கி—விரைவினில்
போய் வா பாங்கி

அநுபல்லவி

ஓய்வாய் இருந்த என் உள்ளத்திலே
புது ஊக்கம் தந்து மறைந்தானை
அறிந்து வரப்போய் வா—பாங்கி விரைவினில்

சரணம்

மாசில் எழில் முகமும் வைரக்கதவுபோன்ற
மார்பகமும் கம்பீர நடையும்—விரித்தசடையும்
கூசுதல் குறைந்து இசையும் பிறந்து
பேசவும் ஆவல் கொள்ளுதடி—
உடன்போய் வா-பாங்கி-விரைவினில் போய்வா பாங்கி

---

**ஸ்வர்ணகாந்தி & வல்லபன்**

கல்யாணி

ஸ்வ : சந்திர சூர்ய ஒளியின்றி மாறினும்
நமது நேயம் விடுமோ—நம்
காதர் சுடரே மங்காது வளர்ந்திடும்
தீதேது மில்லாததே

வல். சகல பாக்யமும் அடைந்தோமே நாமிங்கே
நிகரே இல்லையே நானிலே மீதே
ஜகமேல் நிஜசுகம் என்றும் காண்போமே
மிகமகிழ் வோடினி வாழ்வோமே

பியாகடை

ஸ்வ : இந்திரபோக சுகவாழ்வு தானுமே
எமது வாழ்விற்கிணையோ—சுக
நாதமுடனே நன்ருக இசைந்திடும்
கீதம் போல் நீங்காததே

வல் : நமது அன்பு ஒருநாளும் மாருதே
நிதமும் வளரும் பிறைபோலே
எழுமா பிறவியும் சேர்ந்திடும் நிழல்போல
உடல் உருமாறினும் தொடர்ந்து வருமே

காபி

ஸ்வ : வாழ்க்கை இன்ப சுகவாரி மூழ்கியே
வளரும் காலம் அறியோம்
என்னுளும் இன்பமாய் தேன்போல் இனித்திடும்
என்றும் தெவிட்டாததே

வல்: உலகில் யாவும் மறந்தோமே உண்மையாய்
உணவை நாமும் துறந்தோம்
ஊனுடனே நம் உடலோடுள்ளம்
சேர்ந்து வாழ்வோம் உலகில்

---

ஸ்வர்ணகாந்தி பல்லவி

கனவினில் வந்தென்றன்
கருத்தினை கொள்ளை கொண்ட
கள்வன் எங்கே சொல்லடி என் பாங்கி—

தினஹரன் ஒரு கோடி சேர்ந்து வந்தார்போல்
தோஜோ மயரூபமே
வனஜ மலர் முகமும் வாரிஜ நயனமும்
கண்டென் மனம் பூரித்தேன்

## சரணம்

மஞ்சம் பார்த்து வந்த நடையழகும்
வந்தென் முகம் பார்த்து புன்னகை பிறந்ததும்
சொந்தம் போல் என்னிடம் செய்த விஷமச் செயல்
அந்தரங்கமாய் அமுதமொழி பொழிந்தார்
பரவச மானேனடி என் பாங்கி

---

**பூப்புலி & சகி**

ஓ அம்மே அம்மே ஐஐயே ஐயே—ஆயி ஆயி
எங்குமே கிடைக்காத தங்கம்—கம்–கம்–கம்–கம்–ஐம்–ஐம்
எங்குமே கிடைக்காத தங்கம்

**சகி :** ஏ—என்னது

**பூப் :** ஆ அதுவா
என்னது நான் சொல்வேன்
கண்ணாலே பார்த்துக்கோ...... (ஓ)

சொர்ணமேக பறவை எங்கிற பேருங்க
அது சொல்ல கேட்டிருப்பீங்க பாருங்க
இவர்தானுங்க—இவரேதானுங்க
இவர் சுபாவத்தை பற்றி சொல்ரேன் கேளுங்க

சின்ன சின்னவாய்திறந்து
சிரித்திடச் செய்திடுவார்
சிங்கார நடைநடந்து
சித்தத்தை கவ்விடுவார்
பன்னீரிலே குளிப்பார்
பட்டு மெத்தைமேல் படுப்பார்
சொன்னபடி எல்லாம் செய்து
சந்தோஷமும் தான் கொடுப்பார் (ஓ

சந்தனம் பூசிக்கொள்வார்
தாம்பூலம் போட்டுக்குவார்
சந்திரனைக் கண்டவுடன்

**சகி :** என்னடி செய்யும்

பூப் : பாட்டுப்பபடிப்பார் பாலுங்குடிப்பார்
கூட்டிலிருந்து கூவி அழைப்பார்
சந்திரனைக் கண்டவுடன் சரஸமாட வந்திடுவார்

(எல்லோரும் சிரித்தல்)

சகி : ஹா

பூப் : வீட்டிலிருந்தால் விருத்தியாகும்
என்ன விருத்தின்னு கேக்கிறீங்களா
குலம் விருத்தியாகுமம்மா
குழந்தைகளும் கொஞ்சுமம்மா
அம்மா—அம்மா—அம்மா—அம்மா குழந்தை
பலே—பலே—பலனுண்டாகும்
பஜ்ஜி ராஜா இவர்தானம்ம (ஓ அம்மே)

---

**மனோஹரி**

வஞ்சகமேன்—என் அன்னமே
கெஞ்சி கெஞ்சிக் கேட்டும் உன்னடை கற்றுக்கொடாத
உனைக்கண்டே பொறாமை கொண்டேன்—புறாவே
உலகை மறந்தொரு கவலையில்லாது
சதா—மகிழ்ந்தழகுடன் விளையாடும் உனை

**தேவமனோஹரி** மந்தாரி—ஆதி

இந்திரனோ இவர் சுந்தரனோ ஒரு
கந்தர்வனென்பதும் இவர்தானோ இந்த
சுந்தரரூபனை அடையும் புண்யம்
புரிந்த பாக்கியவதி அவள் யாரோ

ஸிம்மேந்திரமத்யமம்

உள்ளத்தை கொள்ளைகொண்டார்—எந்தன்
இவர்க் கென்மேல் சிறிதேனும் ஆசையுண்டோ
என்பொருளெல்லாம் கொள்ளை கொள்ள வந்த
கள்வனோ மனங் குழம்பித்தவிப்பதேனோ

ஆபோகி

இரும்பையும் காந்தம் போல் இழுக்கும் என் அழகின்முன்
எந்த கள்வன் மனம் நிலைகலங்காது விரும்பாது
ஆடவன் சுகனே ஸனகனே
வைராக்கியந்தனைக்காண்பேனே அவன்—என்னை
விரும்பாத ஆடவன் சுகனே

---

**வல்லபன்** **கீர்வாணி**

உத்தம குண மாந்தர் கனவிலும்
ஸத்திய நெறி தவருர்
உயிர்களெல்லாம் படைத்துக் காக்கும்
ஒரு தெய்வமுன்டென்பதை மறவார்
உடன் அழிந்திடினும்
எத்தனையோ மகுடபதிகள் மறைந்தார்
எவரே சத்ய ஹரிசந்திரனை மறந்தார்
சக்தியின் லீலையிலே—பரா

உலகெல்லாம் தலைகீழாகவே மாறுவதறியீர்
சிற்றறிவுள்ள மனிதர் செயலும் அல்ப
சிந்தனைகளும் சிலநாளில் சிதறும்
தேவி கடாக்ஷம் ஒன்றே சாஸ்வதம்.

---

**தேவமனேஹரி**

சேலை கட்டிய மாதரை நம்பி காலத்தை கழிக்காதே
இது ஸகஜம் தான் வீணிலே முழிக்காதே நீ

(சொல்லுகள்)

முன்னே பின்னே பார்த்து முழிக்கிற—என்னை
மொறச்சுப் பாக்குறே—
என்னடா இவளும் பொம்பளைத்தானேன்னு
என்னையே நினைக்கிறே

ஓ—மனசே அறிவேன்—மயங்காதே நீ

ஆ—அழகுள்ள ராசாவே
மலேமேவிடும் குறசாதியில் நான் பிறந்தேனே
அலேமோதிடும் அரசே குறி
தான் சொல்லுவேன் (சேலே)

மஞ்சம் குளிக்கும் மொகத்தை நம்பி
வீணு சஞ்சலப்பட்டுக்கிறே
அஞ்ச நெஞ்சழுத்தமுள்ள வஞ்சுக்காரியை நெனேச்சு
எங்கறே—இல்லேயா

மனம்போல் நடந்திட மறந்து நின்றனே
செருக்குக்கொண்டானே—அவளே
திருப்ப உன்னலே
மூடியாதினி பிடிவாதம் நிறைந்தவள்தானே
அதை நான் ஒரு நொடியில்
உனக்கிணங்கச் செய்வேனே (சேலே)

பம்பரம்போல சுத்தி சுத்தி வந்து
கும்பிடச் செய்யட்டுமா
உன்னே நம்பிடச் செய்யட்டுமா—இல்லே
உள்ளத்தை சொல்லட்டுமா
ஓடிவந்து உக்காரச்சொல்லட்டுமா

பாட்டு

அலுக்கும் குலுக்கும் செய்து ஆடவேணுமா
ஆலசயாக இங்கேவந்து பாடவேணுமா
என்னளும் உன்னேக்கண்டு ஏங்கவேணுமா
உந்தன் பின்னலே ஓடிவரத்தான் செய்யவேணுமா
மலேபோலவள் அசையாதவள் மனசையும்தானே
உன் மனம்போல் இந்த மருந்தால் உன்னே மகிழ்ச்செய்வேனே

---

**தேவமனேஹரி** பல்லவி

மதன நீவா சமயமீதே கண்ணளனே—வா
மனமோஹன—என் இன்பமே—வா—ஹா

அநுபல்லவி

மௌன மேனையா—மாது என்னிடமே
மர்மம் யாவுமே நானறிவேனே
புவனத்யாகயோகா—பிரபோ—வா
ஆனந்த வாழ்வின்—அமுதமே

சரணம்

கடந்த ஞானியும் காணாததில்லையே
காதல் தியாகியே—வேதனையாலே
மலரானை மருவ தானழைத்திடவே
மகிழவாரும் துரையே ஹ...ஹ...ஹா

---

குலேபகாவலி

டான்ஸ் பாட்டு (லலிதா—பத்மினி)

அஞ்சாமல் வந்தவன் யாரடா உந்தன்
நெஞ்சை பிளந்தெரிவேன் பாரடா
வஞ்சகமாய் வந்த வாயாடியே—உன்னை
பஞ்சு பஞ்சாகக்கிழித்து
சிதைத்து நான் பாதாளம் தள்ளுவேன் பாரடா

ஆண் : மலர் தேடி வந்தேன் பெண்ணே—இந்த
மலர் தேடிவந்தேன் பெண்ணே—எந்தன்
மனம்போல் இதைக்கான
வெகுதூரம் அலைந்தே நான்

பெண் : வனந்தேடி—விரைந்தோடி
துணிந்தே வந்தெனைக்கேட்ட
மலர் ஏனோ மணவாளரே

ஆண் : கண்ணே என் தந்தை
கண்ணிழந்தார் மீண்டும் பெற
மலர்கொண்டு செல்வேனே நான்

பெண் : முறையோ நீர் என்னைவிட்டு
பிரிந்தேக நினைத்தாலும்
முடியாது விடுவேனோ நான்

ஆண் : உடனே சென்றதும் மீண்டும் வருவேனே நான்

பெண் : வருவேன் உம்முடன் நானே

ஆண் : வெகுதூரம் வழிதானே

பெண் : இருந்தாலும் பயமில்லை
இனி நானும் தொடர்வேனே

பல்லவி

இன்னும் வராததென்னக்காரணம்—அவர்
இத்தனை நாளாக ஊரை சுற்றிக்கொண்டலைகிறாரா—இன்னும்
என்னைவிட்டுத்தான் பிரிந்து இருப்பதும் முறையோ
இஷ்டம்போலவே திரிந்து வருவதும் சரியோ
மின்னலிடை கண்கள் அங்குமினுக்கிய சதியோ
மேதினியை சுற்றிவரவேண்டும் என்ற விதியோ
ஊருபேருமின்றி ஊதாரித்தனமாக
உள்ளே நுழைந்தவன் யாரடி
சும்மா துள்ளாமலே பதில்கூறடி
ஆறுக்கும் நூறுக்கும் ஆட்டுக்கும் மாட்டுக்கும்
நோட்டம் தெரியாமே பேசரே
கைநீட்டி நெளிச்சிக்கிட்டு வீசுரே

நாகம் ஆடக்கண்டு வேகமாக வந்து
நாக்கு பூச்சிகூட ஆடுமா ?
சும்மாநாவை அடக்கிக்கொண்டு ஓடம்மா

போகப்போக எல்லாம் புரியுதம்மா—சும்மா
பூச்சாண்டி காட்டாதே நியாயமா
சத்தம் போடுவதேன் சம்பிரதாயமா

ஆண் : போதும் போதும் சும்மா சண்டை போடாமல்
இப்போது எந்தன் சொல்லை கேளம்மா
இங்கே யாரம்மா—அருமை கண்ணம்மா—ஆசைசெல்லாம்மா—
அம்மம்ம

கத்தாதேடி தாலிக்கட்டிநானிருக்க

வித்தாரம் பேசாதே நிறுத்திக்கோ
சும்மா வேடிக்கை காட்டாதே—நடந்துக்கோ
கத்தாதேடி சும்மா எனக்குமுனக்கும் இன்பம்
இல்லாமலே செய்வேன் நானடி
அவரைக்கல்லாக்குவேன் அங்கு பாரடி
எழுந்தென்னுடன் வாரும் துரையே

ஆண் : ரெண்டு பெண்களும் தந்திட்ட சுகம்போது அம்மம்மா
என்ன முன்போல கல்லாக செய்யவேணும் அம்மம்மா

பெண் : இனி என்னாளும் சண்டைவராது என் கண்ணாளா

ஆண் : இதை என்னாலே நம்ப முடியாது—என்னாலே
சும்மா அரட்டி உருட்டி—வெரட்டியே ஆளை
வெரட்டிபாக்குற வேலையா
அங்கே சுத்தி இங்கே சுத்தி—வண்டுபோல் திரிந்து
இங்குதானே வரவேணுமடி

ஆண் : மாட்டெரெண்டும் கட்டிஓட்டிணும் வண்டி
சாட்டையில்லாவிடில் போகுமா ஒங்க
சாகசமேன் சும்மா வாங்கம்மா

---

## பூப்புலி—மனோஹரி

ஆண் : டிரியோ......
டிரியோ டிரியோ டிரியோ டிரியோ டிரியோ ஆயாலே
காடே கவுதாரி மைனாவும் மாடே புறாவும்
வாங்கலையோ ஆயாலோ
வாங்கி கீங்கி வச்சிருந்தா முட்டைபோடும் ஆயாலோ
முட்டையைதான் வவுச்சாப்போட்டகுட்டிபோடும்
ஆயாலோ

பெண் : ஓ......ஓ......

ஆண் : போதுமம்மா

பெண் : பியாகுலாதே அய்யாமேலே ஜாதே
சலோ நயி ஜாஞ ஆ......
சலோ நயிஜாஞ
ஐயா ஓ அம்மே நீங்கள்
அங்கே அங்கே பார்க்கிருன்

ஆண் : அப்பனும் அம்மையும்தானே ஆமா
ஆசையா தோசையும் வாங்கித்தந்தானே

பெண் : ஜாரே நிம்ப்ள் மேலே நீ தில்லாலே ஹை ராமா
சலாமாலேகும் போட்டா நல்லால்லே

ஆண் : அப்பபடிப்போடு

ஆண் : வதனமே நீலகண்டமோ மாயப்பிரபஞ்சமோ

பெண் : ராசா ராசா ராசா ஒன்ஞலே
ராவா பகலா தனியா தவிக்கிறேனே
ஆமா உன்ஞலே ஐயா
தவியாய் தவிக்கிறேனே

ஆண் : கிருஷ்ஞ ஏகந்தா கடம்பா
அரச மரத்தைவிட்டு
ஆலமரத்துலே—எ ராசா
ஏறி தவிக்காதடா

பெண் : கருடாமூர்த்தி பூந்தி—நீ—வாங்கித்தா—நம்ப
காதுகண்ணே நீட்டிநெளிச்சாக்கத்தான்
காசு தருவாங்கத்தான்
கையை காட்டி கேக்கத்தான் (கருடா)

ஆண் : பவளக்கொடி மரத்துமேலே பாயாதே ராசா
பாயாதே ராசா பச்சமுள்ள ரோசா

பெண் : ஜரு ஜரு கோந்தி பலா—சவாக பிலா
மகராசிக்கு வாலா—மிட்டாய்கடை லாலா

ஆண் : ப்ரூகி முகுந்தேதி—அப்பனே
பூரியும் கடலையும் ஆறியே போச்சே
வாரியா இல்லையா நேரமுமாச்சே

பெண் : நஹிதினத்தா பலே சையித்தான்
அமா குஷித்தான் நீ ஆயாளோ
ஜகா மகாராணி ராஜாக்கே ஜலாக்கே—ஹோக்கி ஜல்சாஹோ

ஆண் : மதனுங்கி சுந்தர ரூபி
மானத்தில் மழையுமே பெய்யுமா

பெண் : ஆயி திவாலி உங்கப்பன் திவாலி

ஆண் : அது ஆண்டிப்பண்டாரம்—உனை வேண்டிக்
கொண்டேனே—பழனி ஆண்டி...

ஆ—பெ : ஸ்ரீ ராமச்சந்திரனே ஸ்ரீலோல சுந்தரனே
ஸ்ரீமந் நாராயணனே ராம் ராம் ராம்

★

உங்கள் ஊரில் எதிர்பாருங்கள்!

